அந்தத் தமிழர்கள் தாங்கள் விரும்புகிற நாடுகளுக்குச் செல்ல உதவ வேண்டும் அல்லது தமிழ்நாட்டிலே அவர்களை அகதிகளாக வைத்துக்கொள்வதற்கு நாம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கவனத்தை ஈர்த்து அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், அவ்வளவுதான்.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.*

***திருமதி டி. யசோதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2009-2010 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பத்து மூன்றாவது முதல் நூற்று நாற்பத்து எட்டாவது வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மனுக்கள் குழுவின் தலைவர். (குறுக்கீடுகள்)*

திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2009-2010 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் எண்பத்து ஏழாவது முதல் தொண்ணூற்று மூன்றாவது வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)*

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(இ) இலங்கை அகதிகள் மலேசிய சிறையில் துன்புறுத்தப்படுதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் இப்பொழுது*